அமானுஷ்யத் தொடர்

புதிய பகுதி

# கா... கா... கா...

இந்திரா சௌந்தர்ராஜன்

4 வாரத் தொடர்



நானொரு காகம்...
உலகப் பறவைகளில் வினோதம்
இருள்தேகம் எனக்கு...
அருள்லோகம் இலக்கு!



வானத்தில் மிதந்தபடி வந்து பின் சரிந்தபடி இறங்கி ஒருவழியாக இளைப்பாறலோடு மதுரை விமானநிலையத்தில் நின்றது அந்த விமானம். சில நிமிடங்களில் உலோகப்படிகள் பொருத்தப்படவும் பயணிகள் இறங்கத் தொடங்கினர்.



## வாடி என் சக்களத்தி!

அவர்களில் ஸ்ரீராமுடன் எடில்கார்டும் இருந்தாள்.

அவள் கைகளில் ஐந்து வருட தாரா!

எடில்கார்ட் முகத்தில் ஒரு பரவசம் தெரிந்தது.

இந்தியக் காற்றை இழுத்து சுவாசித்தாள். ஆனால் குழந்தை தாராவிடம் சுரத்தில்லை.

அமெரிக்காவின் நியூ ஆர்லியன்சில் இருந்து 27 மணி நேரமாக பயணித்து வந்த களைப்பு.

ஸ்ரீராம் முகத்திலும் களைப்பு தெரிந்தது. இருந்தபோதிலும் எட்டு வருடங்களுக்குப் பிறகு தாய் மண்ணை தீண்டப் போகும் ஒரு சந்தோஷம் களைப்பைக் கடந்து தெரிந்தது. உடன் வந்த ஒரு பயணி 'பை!' சொல்லியபடி கைகுலுக்கிவிட்டு, சிரித்தபடியே வேகமாக முன்செல்ல, பின்னால் எடில்கார்டுடன் நடந்தான் ஸ்ரீராம்.

முப்பத்தி மூன்று வயதாகிறது அவனுக்கு.

நல்ல படிப்பாளி. கட் அடிப்பது, காலைக்காட்சி பார்ப்பது, செல்லும் காதுமாய் மொட்டை மாடியில் உலாத்துவது மற்றும் டி.வி. அடிக்ஷன் என்று எதுவும் இல்லாததால் தங்கப்பதக்கத்தோடு பட்டம் வாங்க முடிந்தது. அமெரிக்காவும் இப்படி ஒரு இந்திய ரத்தமே எங்களின் பிரதான தேவை என்று நம் ஊர் மதிப்புக்கு மாதம் எட்டு லட்ச ரூபாய் சம்பளத்துக்கு ஒரு நல்ல கம்ப்யூட்டர் இஞ்ஜினீயராக அவனை ஏற்றுக் கொண்டது. அங்கே அவனுக்கு உதவியாளராக அமைந்தவள் தான் எடில்கார்ட்! அவனால் மிகவே ஈர்க்கப்பட்டாள்.

ஸ்ரீராமின் அப்பா வைத்யநாதன் ஒரு தமிழ்ப் பேராசிரியர். கம்பராமாயணத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க பெரிதும் பாடுபட்டவர். ஸ்ரீராம் அமெரிக்கா வந்த புதிதில் ஒரு மூன்று மாத ஓய்வில் அவனோடு தங்குவதற்காக நியூஆர்லியன்ஸ் வந்திருந்தார். எடில்கார்டும் சந்தித்து அவரோடு மிகவே இணக்கமாகி விட்டாள்.

வைத்யநாதன் பழுத்த ஆன்மிகவாதி. அமெரிக்கா வந்தும் நெற்றிக்கு விபூதி தரிப்பதையோ, தன்வசம் உள்ள சிறு தங்க வேலுக்கு பாலாபிஷேகம் செய்வதையோ அவர் விடவேயில்லை. எடில் கார்டை அவரது தீவிரம் ஆச்சரியப்படுத்தியது. அவரிடம் நிறையவே ஆன்மிகம் தொடர்பாக








## அமானுஷ்யத் தொடர்



கேள்விகள் கேட்பாள். அவரும் பளிச் பளிச் சென்று அவளுக்கு பதில் சொன்னதில், அவர் எதிரிலேயே ஒரு நாள் எடில் கார்ட் குங்குமம் வைத்துக் கொண்டு புடவை எல்லாம் கட்டிக் கொண்டு வந்து நின்றாள். ஆனால், ஸ்ரீராம் சிரித்தான்.

"எடில், அப்பா உன்னைக் கவுத்துட்டாரா?" - என்று கிண்டலாக கேட்டான்.

"நோ... அங்கிள் சேவ் மை ஃப்யூச்சர் அண்ட் சோல்... (Soul) - என்று பதிலுக்கு பளிச்சிட்டாள். அதன்பின் ராமாயணம், மகாபாரதம் என்கிற ஆங்கில மொழியாக்கங்களை எல்லாம் படித்தவள், இறுதியில் தன்னை ஒரு கிருஷ்ண பக்தையாக மாற்றிக் கொண்டுவிட்டாள்.

இந்த மாற்றம் ஸ்ரீராமை திருமணம் செய்து கொண்டு அவன் மனைவியாவதற்கும் வசதியாக அமைந்தது.

ஆனால் ஸ்ரீராம் ஒரு நியூட்ரல் மேன். கடவுள் இருந்தால் என்ன, இல்லாவிட்டால்தான் என்ன, நாம் வேலை செய்தால்தான் நமக்கு சாப்பாடு' என்பதை ஸ்டைலான ஆங்கிலத்தில் அழகாகவே சொல்வான். அவனுக்கும் கடவுள் தேவைப்படவேயில்லை. படித்தான், படிப்பு வந்தது. வேலைக்கு முயன்றான், உடனேயே வேலையும்





## அமானுஷ்யத் தொடர்

கிடைத்தது. தலைவலி காய்ச்சல் கூட வந்துவிடாதபடியான ஒரு ஆரோக்கியமான உடம்பு - எனவே வலிகளும் பெரிதாக ஏற்பட்டதில்லை.

இவனால் எப்படி கடவுளை நினைக்க முடியும்?

பிறர் நினைத்தும் பூஜித்தும் பார்த்திருக்கிறான். அதுதான் அவன் அப்பா வைத்யநாதனே பெரிய பக்தர் ஆயிற்றே? அவரிடம் 'எதற்காக இந்த வணக்கம்' என்றும் கேட்டிருக்கிறான்.

'நம்மைப் படைத்த கடவுளுக்கு நாம் நன்றி காட்டவேண்டாமா?' என்று அவர் திருப்பிக் கேட்பார்.

'பூஜைதான் நன்றியா?'

'பூஜையும் ஒரு வித நன்றி....'

'அது மனதுக்குள் இருந்தால் போதாதா?'

'அது எப்படி வெளியே தெரியும்?'

'ஏன் வெளியே தெரிய வேண்டும்?'

- இப்படி கேள்விகள் வளரும். ஒரு கட்டத்தில் முட்டிக் கொள்ளும். அது என்னவோ அவனது கேள்விகளுக்கு ஒருவரும் அவனுக்குப் பிடித்த விதத்தில் ஒரு பதிலைச் சொன்னதேயில்லை.

**இந்த வெள்ளைக்காரி ஸ்ரீராம் வாழ்வில் குறுக்கிடாமல் இருந்திருந்தால்...**

ஆனால் எடில்கார்ட் இதற்கு நேர் எதிர்.

ஸ்ரீராமின் இதே அப்பாவின் பதில்கள்தான் அவளை ராமா, கிருஷ்ணா என்று சொல்ல வைத்தன.

இப்போது இருவரும் மதுரை வந்திருப்பது அவர்களின் ஒரே மகளான தாராவிற்கு முடி இறக்குவதற்காக...!

இதில் கூட ஸ்ரீராம் மிகவே மாறுபட்டான். 'கடவுள் மிகப்பெரியவர் என்றால் அவருக்கு போயும்போயும் அற்ப மயிரையா கொடுப்பார்கள் என்று கேட்டு அதெல்லாம் அர்த்தமில்லாத சடங்குகள் தேவையில்லை' என்று கூறிவிட்டான்.

ஆனால் தாராவுக்கு ப்ரைமரி காம்ப்ளக்ஸ்.

பச்சைத் தண்ணீரில் விரல் பட்டால் கூட ஜலதோஷம் பிடித்து விடுமளவுக்கு பலவீனமான உடம்பு. இந்தக் குழந்தைக்கு குலதெய்வம் சன்னதியில் முடி இறக்கினால் இதன் உடல்நலம் சரியாகி 'பாலாரிஷ்டம்' என்பது நீங்கி குழந்தை ஆரோக்கியமாகி விடுவாள் என்று ஸ்ரீராமின் தாய் சொன்னதால் தான், அதை எடில் கார்டும் உறுதியாக பிடித்துக் கொண்டதால்தான் மூவருமே வந்திருக்கிறார்கள்.

'நீ ஏமாறப் போறே... அப்புறமா நான் உன்கிட்ட பேசிக்கறேன்' - என்கிற ஒரு கோபமான டீலுடன்தான் அவன் அவளோடு வந்திருக்கிறான்!

ஏர்போர்ட்டுக்கு வெளியே ஸ்ரீராமின் ஒட்டுமொத்த குடும்பமே வேனிலும் காரிலுமாய் வந்து குவிந்திருந்தது. அவன் தாய்மாமா அருணாசலம் தன் ஒரேமகள் கனிகாவோடு வந்திருந்தார். இந்த எடில்கார்ட் மட்டும் ஸ்ரீராம் வாழ்வில் குறுக்கிடாமல் இருந்திருந்தால் இந்த கனிகாதான் ஸ்ரீராமின் மனைவி. ஸ்ரீராமின் குடும்பச் சொத்தின் மதிப்பு எப்படியும் இருபது முப்பது கோடி இருக்கும். அவ்வளவுக்கும் அதிபதி. எடில்கார்டால் எல்லாமே கெட்டுப்போனது. ஆனாலும் அவரிடம் இப்போது ஒரு புது நம்பிக்கை.



காரணம் கேசவ நாராயண நம்பூதிரி!

குலதெய்வமான மயான பரமேஸ்வரியும் அடுத்த நம்பிக்கை.

'கவலைப்படாதீங்க அருணாசலம். அந்த வெள்ளைக்காரியும் அவ பொண்ணும் திரும்பிப் போகமாட்டாங்க. அவ இங்கே வழிபாடு பண்ண வரலை. சாம்பலா ஒரு கலயத்துக்குள்ள அடங்கத் தான் வரா!

உங்க பொண்ணுதான் அவனுக்கு இனி மனைவி.

தைரியமா இருங்கோ - நான் பாத்துக்கறேன்' - என்று கூறியிருந்தார். அந்த நம்பிக்கையோடு எடில் கார்டை பார்த்த அவரை ஸ்ரீராமும் அவளுக்கு அறிமுகப்படுத்தினான். அடுத்து கனிகா! அவளும் கைகுலுக்கினாள்.

'வாடி என் சக்களத்தி' என்றாள் மனதுக்குள்.. அறிமுகம் முடிந்து எல்லோரும் காரில் ஏறிக்கொள்ள, கார்களும் சீறிக்கொண்டு புறப்பட்டன.

அவர்கள் விலகிய நிலையில் எடில்கார்ட் நின்று கொண்டிருந்த இடத்தில் அவள் காலடிக்கு கீழ் இருந்த மண்ணை மட்டும் ஒருவன் வந்து ஒரு கைப்பிடி அளவுக்கு எடுத்து கர்சீஃப்பில் கட்டிக் கொண்டான்!

(தொடரும்)

அமானுஷ்யத் தொடர்




இந்திரா செளந்தர்ராஜன்

# கா.. கா.. கா.. 2

மதுரை கே.வி.எஸ். நகரில் இருந்தது ஸ்ரீராமின் பங்களா! அவன் பிறந்து வளர்ந்து நிமிர்ந்து எழுந்த இடம். பங்களாவினுள் கார் புகுந்து நின்றது. இறங்கிய ஸ்ரீராமும் பங்களாவை அளப்பது போல பார்த்தான். எடில் கார்டும் பார்த்தாள். தாராவிடம் ‘இதுதான் உன் டாடியுடைய பிறந்த வீடு’ என்றாள். உள்ளே நுழையுமுன் சம்பிரதாயமாக ஆரத்தி எடுக்கப்பட்டது.

அமானுஷ்யத் தொடர்

எடுத்தது ஸ்ரீராமின் அத்தை. அந்த அத்தை தட்டோடு விலகவும் "ஆன்ட்டி ப்ளீஸ்..." என்று தடுத்தவள் தன் கையில் அணிந்திருந்த தங்க மோதிரத்தை கழற்றி ஆரத்தி தட்டில் போட்டாள். அத்தையின் புருவம் ஆச்சரியத்தில் வளைந்தது.

"ஆரத்தி எடுத்தா தட்டுல சம்திங் ஏதாவது போடணும் இல்ல...?" - என்று அவளே கேட்கவும் எல்லோர் புருவமும் ஆச்சரியத்தில் வளைந்தது. இதெல்லாமும் இவளுக்குத்

## ரோசாப்பூ மாதிரியே இருக்காக...

தெரிந்திருக்கிறதே!

அவர்களும் உள் நுழைந்தார்கள். ஹாலில் ஸ்ரீராம் அப்பா வைத்யநாதன் வாத நோயால் தாக்கப்பட்டவராய் நாற்காலியில் பரிதாபமாக அமர்ந்திருக்க, எடில் கார்ட் அவரை நோக்கித்தான் ஓடினாள். அவரை நெருங்கிய வேகத்தில் மண்டியிட்டு அமர்ந்து கொண்டு அவர் கைகளைப் பற்றிக் கொண்டு மிக விரிவாக நலம் விசாரித்தாள். அப்படியே தாராவையும் அவர் அருகில் அழைத்து நிறுத்தி "ஸீ யுவர் கிராண்ட் ஃபாதர்... கால் தாத்தா... கால் தாத்தா..." - எனவும் தாராவும் "தா... தா" என்றாள் மழலையில். வெறித்துப் பார்த்தபடி இருந்த ஸ்ரீராம் அப்பாவை அந்தக் கோலத்தில் பார்க்க நேர்ந்ததற்காக வருந்தினான்.

"டாட்" என்று அவர் தோல் மேல் தன் வலது கையைப் போட்டு ஒரு ஸ்பரிசம் கொடுத்தான். அதுவே அவருக்கும் போதுமானதாக இருந்தது.

சில நிமிடங்களுக்குப் பிறகு மாலை போடப்பட்ட படமாகிவிட்ட அவன் தாய் கல்யாணியின் புகைப்படம் முன் இருவரும் நின்றனர்.

"உங்கம்மா சாகும்போது உன் நினைவுதான்! கடைசி வரை வெள்ளக்கார மருமகளையும், பேத்தியையும் பாக்காமலே கண்மூடப் போறமேங்கற தவிப்பும் ஆற்றாமையும் உங்கம்மா கண்ணுலயே தெரிஞ்சது. ஓடிப்போய் உன் மனைவி குழந்தை இரண்டு பேரும் சேர்ந்து இருக்கற போட்டோவை என் லேப்டாப்ல டௌண்லோட் பண்ணி எடுத்துக்கிட்டு வந்து காமிச்சேன். என் பேத்திக்கு அப்படியே என் மூக்குன்னு சொல்லி பூரிச்சுப் போனா..."

- பின்னால் இருந்து சொல்லிக் கொண்டிருந்தார் அருணாசலம்.

அது எடில்கார்ட் கண்களில் கண்ணீரை வரவழைத்திருந்தது.

"சரிப்பா... மாடில உன் அறைல போய் ரெஸ்ட் எடுத்துக்கோ. ஜெட்லாக் ரிலீஸ் ஆகட்டும். நாளைக்கு மத்த விஷயங்களைப் பேசலாம்" என்றவர், வைத்யநாதனையும் அவரது பெட்டுக்குக் கொண்டு போய் படுக்கச் செய்வதில் மும்முரமானார்.

எல்லோர் பார்வையும் அவர்கள் மேலேயே இருந்தது. வீட்டு வேலைக்காரி மகேஸ்வரிக்கு எடில்கார்டின் அந்த ரோஸ் நிறம் மிகவே ஈர்ப்பை உருவாக்கியிருந்தது. 'ரோசாப்பூ மாதிரியே இருக்காக...' என்கிற அவள் விமர்சனம் கனிகா வரையில் காதில் விழுந்த திராவகச் சொட்டாட்டம் எரிந்தது.

குருவித்துறை தென்னந்தோப்பு! ஸ்ரீராமின் பூர்வீக சொத்து - உள்ளே ஐயாயிரத்துக்கும் மேல் தென்னைகள் முப்பது வேலையாட்கள் எப்போதும் உள்ளே ஏதாவது வேலை பார்த்தபடி இருப்பார்கள். அப்போதும் இருந்தார்கள். தோப்பின் நடுவில் ஒரு ரெஸ்ட் ஹவுஸ். ஏ.சி., டிஷ் ஆன்டெனா, சோலார் ஹீட்டர் என்கிற சகல வசதிகளோடும்!

அழகாய் டிசைன் செய்யப்பட்ட பால்கனி. அதில்



பக்கத்து வைகை ஆற்றில் குளித்துவிட்டு வந்த நிலையில் தன் குடுமியின் சிடுக்குகளை விரல்களால் எடுத்தபடி உட்கார்ந்திருந்தார் கேசவ நாராயண நம்பூதிரி.

பார்வை தோப்புக்குள் நுழையும் மாருதி ஸ்விஃப்ட் காரின் மேல் இருக்க, இறங்கியவர் அருணாசலம். பால்கனியில் இருந்த நம்பூதிரியை அவரும் வெறித்துப்

அமானுஷ்யத் தொடர்

பார்த்தார்.

"என்ன நம்பூதிரி வசதியா இருக்குல்ல...?"

"ஆஹா! தெட்சிண கங்கையான வைகைல குளிச்சதுல இந்த பிராணனுக்கு ரொம்பவே சந்தோஷம்."

"இங்க மட்டும்தான் வைகல குளிக்க முடியும். மதுரைப் பக்கம் இது வைகை இல்ல, அசிங்கம் பிடிச்ச கழுதை!"

"சாரமில்லா... வந்த விஷயம் நோக்கு..."

"என்ன வந்த விஷயம். ஒரே விஷயம்தான். அந்த வெள்ளைக்காரியும் அவ குழந்தையும் ஒழிஞ்சா சரி. யார் வீட்டுச் சொத்து யாருக்கு நம்பூதிரி போகறது...?"

- அருணாசலத்தின் கோபமான கேள்விக்கு ஒரு சிறிய புன்னகைதான் நம்பூதிரியிடம் அரும்பியது.

"என் பொண்ணு இன்னும் நம்பிக்கையோட இருக்கா நம்பூதிரி. அவளையும் ஸ்ரீராமையும் நீங்கதான் எப்படியாவது சேர்த்து வைக்கணும்."

"விஷமம் வேண்டாம். நோக்கு அவ்விட..." - நம்பூதிரி தனக்கருகில் ஒரு இடத்தைக் காட்டினார். அங்கே ஒரு மண்பானை இருந்தது. அதன்மேல் ஒரு மெல்லிய

## 12 அடி நீளத்துல ஒரு பாம்பை நான் பார்த்திருக்கிறேன்!

கறுப்புத்துணி விரிந்து கிடந்தது.

"என்ன நம்பூதிரி அது?"

"அது சர்ப பாத்திரம். ஆ வஸ்திரம் மஹா காளியிண்ட தேக வஸ்த்ரம்."

"இது எதுக்கு இப்போ... இதை வைச்சு என்ன செய்யப் போறீங்க?"

"பறையான்... இந்த தென்னந்தோப்புல சர்பங்கள் உண்டல்லே?"

"நிறைய... பன்னெண்டு அடி நீளத்துல ஒரு பாம்பை நான் பல முறை பார்த்துருக்கேன்."

"எங்கில் அந்த சர்பமே ஆ வெள்ளக்காரிக்கு எமன்..."

"எப்படி நம்பூதிரி..."

"வஸ்யங்களில் பன்னெண்டு வஸ்யம் ப்ரதானம்... ஸ்திரீ வஸ்யம், ராஜ வஸ்யம், புருஷ வஸ்யம், சத்ரு வஸ்யம், ஸ்னேக வஸ்யம், தேவ வஸ்யம், லக்ஷ்மி வஸ்யம், சக்தி வஸ்யம், வானிவஸ்யம், அட்சர வஸ்யம், ரதிரூப வஸ்யம், சர்ப வஸ்யம்... அதில் சர்ப வஸ்யத்தை இப்போ நீங்கள் காண ஞான் காணிச்சு தரா..."

- என்ற நம்பூதிரி அந்தப் பானையை கையில் எடுத்துக் கொண்டு ரெஸ்ட் ஹவுசை விட்டு வெளியில் வந்து தோப்புக்குள்ளும் நடந்தார். பின் நாலாபுறமும் பார்த்துவிட்டு ஒரு சுத்தமான தரைப் பரப்பின் நடுவில் அந்த பானையை வைத்துவிட்டு கருப்பு வஸ்த்ரத்தை பானையின் முன் மடித்துப் போட்டு அதன்மேல் அமர்ந்து கொண்டு சர்பவஸ்ய மந்திரம் எனப்படும் ஒரு மந்திரத்தை இதமான குரலில் உச்சரிக்கத் தொடங்கினார்.

முன்னதாக அருணாசலத்தையும், தென்னைமட்டையை வெட்டியபடி



"இவர் மாடர்ன் சாமியார்னு எப்படிச் சொல்றே?"

"மந்திரத்தால் குங்குமத்துக்கு பதிலா ஸ்டிக்கர் பொட்டு வரவழைச்சுக் குடுக்கறாரே.."

**- பர்வீன் யூனுஸ்**

இருந்த பணியாளர்களையும் கை கட்டாமல் இருக்கும்படி சைகையாலேயே சொல்லவும் அவர்களும் பரபரப்போடு அங்கு நடப்பதைக் காணத் தயாராயினர்.

அரை மணி நேரம் வரை கடந்துவிட்டது. நம்பூதிரியின் மந்திரக்குரல் ஒரே சீராக அந்த வெளியெங்கும் பரவியபடி இருந்தது. முப்பத்தியோராவது நிமிடம் ஒரு சர்பம் அந்த பானையைத் தேடிவந்து அதனுள் புகுந்து சுருண்டு படுத்தும் கொண்டது.

அருணாசலம் வரையில் அது ஒரு அதிசயக் காட்சி!

முப்பத்தி நான்காவது நிமிடத்தில் இன்னொரு பாம்பு வந்து அதுவும் பானைக்குள் ஏறி உள் புகுந்தது. பின்னாலேயே இன்னொரு பாம்பு...

நாற்பதாவது நிமிடத்தில் அந்தப் பன்னிரண்டு அடி ..... பாம்பும் வந்தது. பானையை வெளிப்பக்கமாக வளைத்துக் கொண்டு அப்படியே சுருண்டு விட்டது.

அருணாச்சலத்துக்கு அது ஒரு நம்பமுடியாத ஆனால் நம்பித் தீர வேண்டிய காட்சியாகி விட்டது.

நம்பூதிரி மந்திர

**அமானுஷ்யத் தொடர்**

உச்சாடனத்தை நிறுத்தாமல் அந்தப் பாம்பை லாகவமாக கையில் பிடித்துத் தூக்கி ஒரு மயக்கத்தில் துவண்டு விட்டதைப் போன்ற அதை பானைக்குள் மற்ற சர்பங்களோடு சேர்த்துப் போட்டு மேலே தன் வசம் இருந்த கறுப்புத் துணியால் வாயைக் கட்டினார்.

கட்டி முடிக்கவும்தான் மந்திர உச்சாடனம் நின்றது.

“கேரளத்தில் வீடுகளுக்குள் சர்பம் புகுந்துட்டா இந்த வஸ்ய மந்திரம் சொல்லி இப்படித்தான் பானைல பிடிப்போம். பின்னே இதைக் காட்டுக்குள்ள விட்டுடுவோம்.”

– என்று அருணாசலம் கேட்காமலே விளக்கமளித்தவரை பிரமிப்போடு பார்த்த அருணாசலமும் “பாம்புக்கு காது கேக்காதும்பாங்களே...” என்றார் சற்று சந்தேகத்தோடு...

“இது கேட்டு ஒண்ணும் வரலை. மந்திர சப்தத்தால அதிர்வு உண்டாகி அதனால குறுகுறுப்பு உண்டாகி பின்ன இது வந்ததாக்கும். அதர்வண அபயாசத்தில் சர்ப வஸ்யம் ஒரு அஞ்சாங்கிளாஸ் பாடம். அதே!”

– என்றார் சற்று காட்டமான குரலில்.



“குப்பையிலிருந்து மின்சாரம் எடுக்கலாம்னு சொன்னதை தப்பா புரிஞ்சுகிட்டாங்களா! – எப்படீய்யா?”

“எல்லோரும் உங்க சுயசரிதையை எடுத்திட்டு வந்திட்டாங்க தலைவரே!”

**- கோவை நா.கி. பிரசாத்**

“சரி இந்த பாம்புகளை என்ன செய்யப்போறீங்க?”

“இதுதானே அந்த வெள்ளக்காரியை தீண்டி உன் புத்ரிக்கும் ஒரு வழியை காட்டப் போகுது...?”

“எப்படி நம்பூதிரி”

“குல தெய்வ பூஜையில் சுத்தம் பிரதானம். அல்லாதவர்களை விஷ ஜந்துக்கள் தீண்டும் என்பதே சாஸ்த்ர பிரமாணம். இன்னுமா உனக்குப் புரியலை...?”

– நம்பூதிரி கேட்க அருணாசலத்துக்கும் புரியத் தொடங்கியது.

**(தொடரும்)**





இந்திரா சௌந்தர்ராஜன்

# கா.. கா.. கா..

மறுநாள்.

சமையல் கட்டுப்பக்கம் வந்த எடில் கார்டை ஆச்சரியமாகப் பார்த்தாள் சமையல்கார மாமியாக உள்ள மனோகரி மாமி.

“என்னம்மா... என்ன வேணும் பிரெட்டும் டோஸ்ட்டும்தானே? உனக்காக முட்டை கூட வாங்கி வெச்சுருக்கு. சைவமான நானும் போனா போகட்டும்னு ஆம்லெட் போட கத்துண்டுட்டேன்”- என்றாள்.


ஆனால் எடில் கார்ட் முகத்தில் பதைப்பு.


“நோ... நான் அவரைக் கல்யாணம் பண்ணிகிட்டதுல இருந்தே வெஜிடேரியனாயிட்டேன். ஐ டோன்ட் டச் எக்ஸ்...! ஐ வான்ட்டு நோ ட்ரெடிஷனான டொக்கு, வதக்கல், பெரண்டைத் துவையல். இதெல்லாம் தான்...” என்றாள் தமிழும் ஆங்கிலமும் கலந்து...

மனோகரி மாமிக்கு ஜிலீர் என்றானது.

“ஸ்ரீராம் ஆம்லெட்ட விரும்பிச் சாப்டுவானே?”

“நான் சாப்டக் கூடாதுன்னு சொல்லிட்டேன். வேதாத்ரிஜியோட ஒரு ஆர்ட்டிகிள் படிச்சேன். வெஜிடேரியன்தான் ரைட் ஹ்யூமன்! ரத்தமும் சதையும் ‘பர்பாரியன்!’ ஈவன் சிங்கம் புலிங்கற மாமிச உண்ணிகளுக்குக் கூட ஸ்டார்ட்டிங் எனெர்ஜிதான்




3
4 வாரத் தொடர்

ஸ்ட்ராங். போகப் போக அதுங்க படுத்து அசைபோட ஆரம்பிச்சிடும். ஆனா புல் சாப்பிடற மாடு, குதிரை எல்லாம் தான் வெரி ஸ்ட்ராங்... அதுக்குதான் லாங் எனர்ஜி. ஒரு குதிரைக்கும் சீட்டாவுக்கும் போட்டி வெச்சா குதிரை ஐம்பது மைல் கூட ஓடும். சீட்டாவால ஜஸ்ட் டு கிலோ மீட்டரைக் கூட தாண்ட முடியாது' - என்ற அவள் உதாரணம் மாமிக்கே புதியது.

"ஆமா உங்களுக்கு கோலம் போடத் தெரியுமா?" - என்று அடுத்து மாமி எதிர்பார்க்காத கேள்வியைக் கேட்டாள் எடில்கார்ட்.

"ஓ போடுவேனே..."

"நானும் போடுவேன். ஆனா பெரிய கோலம் போடத் தெரியாது கேன் யூ டீச் மீ?"

"அதுக்கென்ன சொல்லித் தந்துட்டா போச்சு. ஆமா இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும்?"


"நியூஜெர்சில ஒரு தடவை ஒரு லெக்சர் கேட்டேன். ரியலி ஐ வாஸ் ஒண்டர்! இண்டியன் கல்ச்சர்ல கோலம் போடறது, கிணத்துல தண்ணி இழுக்கறது, விறகு அடுப்புல சமையல் செய்யறது, பர்ட்டிகுலரா மண்பானைச் சமையல் எல்லாமே ஸோ ஸோ குட்! வெரி மீனிங் ஃபுல் அண்ட் வெரி எனர்ஜெடிக்! அப்புறம் பாடியோட அனாடமி சைஸ் தெரியாதபடி கட்டப்பட்ற இந்த சேரி, அப்புறம் இந்த பொட்டு இதுலதானே ஹெர்பலான ஆன்டிபயாடிக் மஞ்சள் இருக்குது... ஆம் ஐ கரெக்ட்?"

- எடில் கார்ட், மாமியின் பிரமித்த விழிகளில் பொங்கி வழிந்தாள். ஒரு இந்தியப் பெண் கூட இவ்வளவு உள்வாங்கி உணர்ந்து பேச மாட்டாள். அவளிடம் பேச்சின் தொடர்ச்சி...

"இண்டியன் கேர்ள்ஸ் ஆர் வெரி ஸ்ட்ராங்! இன்ஃபாக்ட் பீரியட்ஸ்ல அவங்களுக்கு ரெஸ்ட் கொடுத்து உக்காரச் சொன்னது வெரி பிரில்லியண்ட்."

அவங்க ஹேர்ஸ்டைல் - பர்ட்டிகுலரா அந்த ஹேர்ல பூவைக்கற அந்த பழக்கம் ஒண்டர் ஃபுல்! ஒண்டர்ஃபுல்!" அவளது கலகலப்பான குரல் அருணாசலம், கனிகா என்று எல்லோரையும்

**கேசம்கற வார்த்தைக்குள்ள சிவா, விஷ்ணு, பிரம்மான்னு மூணுபேரும் இருக்காங்க**



அவளை நோக்கி இழுத்து வந்திருந்தது. "வாங்கோ... இவ பார்க்கத்தான் வெள்ளக்காரி. ஆனா நிஜத்துல இவ நம்ம பொண்ணு. நமக்குத் தெரியாததெல்லாம் கூட இவளுக்குத் தெரிஞ்சிருக்குன்னா பாத்துக்குங்களேன்.

பாவம் கல்யாணி.... இப்படி ஒரு மருமகளை நேர்ல பாக்காமலே கண்ண மூடிட்டா."

- மாமியின் வியப்பு எடில்கார்டின் மாமியாரிடம் வந்து முடிந்து நின்றது.

ஆனால் கனிகாவுக்குள் மாமியின் வியப்பு நெருப்பைக் கொட்டியது.

"சும்மா நாலு விஷயத்த பேசிட்டா உடனே நம்ம பொண்ணா... என்ன மாமி நீங்க? நாளைக்கு குலதெய்வம் கோயிலுக்குப் போய் தலைக்கு மொட்டை போட்டுக்கணும். அது எதுக்குன்னு தெரியுமா... இன்ஃபாக்ட் எனக்கே தெரியாது."

- கனிகாவிடம் அவள் மேலான வெறுப்பு - வார்த்தைகளாகிவிட்டது. ஆனால் எடில் கார்ட் அசரவில்லை.

'ஐ நோத ரீசன்' என்று ஆரம்பித்தாள். அருணாசலத்துக்கே அதிர்ச்சி.

"தலைமுடி சாதாரண விஷயமில்லை. அதுக்கு சமஸ்க்ருதத்துல கேசம்னு பேர். கேசம்கற வார்த்தைக்குள்ள சிவா விஷ்ணு, பிரம்மான்னு மூணு பேரும் இருக்காங்க. அதாவது 'க. ஈச, அம்'ங்கற லெட்டர்ஸ்ல 'க'ங்கற லெட்டர் விஷ்ணு, 'ஈச'ங்கற லெட்டர் சிவா. 'ம்'னா பிரம்மா! அதனால நம்ம தலைல இந்த

மூணு பேருமே கிரீடம் மாதிரி இருக்காங்க. சிரசுலதான் உச்சியில சகஸ்ராரம்கற பாகம் இருக்கு. இதுதான் உயிர் ஆதாரம். இந்த உயிர் ஆதாரத்துக்குக் காவலா கூரையா தலைமுடிங்கற கேசம் இருக்கு.

விஷ்ணு சிவா பிரம்மா சேர்ந்த ஏழு பேர்தான் கேசவன், அதனால தான் தலைமுடியை நாம தைலம் பூசி அழகுபடுத்தி வெச்சுக்கறோம். பெண்கள் பூச்சூடி வழிபட்றாங்க. கோவில்ல இருக்கற சாமியைத் தொட்டு பூஜிக்கறவர் பட்டர்னா இந்த தலைமுடியை தொட்டுத் திருத்தற நாவிதரும் பட்டர்தான்.

கிறுகிறுத்துப் போனது. மாமி திருஷ்டி கழித்து சொடக்குப் போட்டாள். படபடவென்று சப்தம் கேட்டது.

"ஐய்யோ எவ்வளவு திருஷ்டி" என்றாள். அவளது பேச்சு பக்கத்து அறையில் படுத்திருந்த வைத்யநாதன் காதுகளில் விழுந்து அவர் கண்களில் ஆனந்தக் கண்ணீர் வழிய ஆரம்பித்திருந்தது.

அந்தப் பக்கமாய் ஹாலுக்குள் ராமகிருஷ்ணய்யர் நுழைந்திருந்தார்.

கல்யாணி காலமாகி மூன்று வருடமாகிவிட்டது. அவள் இறந்த சமயத்தில் ஸ்ரீராமால்

## காக்கா வந்து சாப்ட்டா அவங்களே வந்துட்டதா அர்த்தம்

அதாவது அம்பட்டர்.

நம்மகிட்ட இருக்கறதுலயே உயர்வானது தலைமுடிதான்.

அதனாலதான் அதையே சுவாமிக்கு காணிக்கையா கொடுக்கறோம். தலைமுடி உதிர்ந்தா மிதிக்கக் கூடாதுன்னு சொல்லியிருக்கறதும் இதனாலதான்."

-எடில் கார்ட் சொன்ன விளக்கம் கேட்டு எல்லோருக்குமே

அமெரிக்காவில் இருந்து வர முடியவில்லை. அவன் வசித்து வந்த நியூயார்லியன்சே புயலால் துவம்சமாகியிருந்தது. எனவே காரியங்களை வைத்யநாதனே செய்திருந்தார். இப்போது பிள்ளை வந்துவிட்டதால் அவளுக்கான திதி தர்ப்பணத்தைச் செய்து வைக்கத்தான் வந்திருந்தார் ராமகிருஷ்ணய்யர்.

அன்றுதான் கல்யாணிக்கும் திதி!

ஸ்ரீராமும் வந்தான். அவனிடம் ஒரு அசிரத்தை.

"இப்ப நான் என்ன செய்யணும்?"- கேட்டான்.

"குளிச்சிட்டு வாங்கோ. நான் சொல்றபடி கேட்டு நடந்துண்டா போதும்."



"ஹூம்... இதெல்லாம் டைம் வேஸ்ட்..." - என்று முணுமுணுத்துக் கொண்டே குளிக்கச் சென்றான். எடில்கார்ட் குளித்துவிட்டு ஒரு காட்டன் சேரியையும் கட்டிக்கொண்டு நெற்றியில் குங்குமத்தோடு தன் பிரவுன் நிற கூந்தலையும் ஒரு மாதிரி அள்ளி முடிந்திருந்தாள்.

அலுத்துக் கொண்ட ஸ்ரீராமிடம் போய் அவன் டைம் வேஸ்ட் என்று சொன்னது பெரிய தவறு என்பதுபோல ஆர்கியூ செய்ய, அவனும் அவளிடம் 'சாரி சாரி...' என்று பதிலுக்கு சமாளிக்கத் தொடங்கியிருந்தான்.

வழக்கம் போல கனிகாவிடம் கவனம்.

அவன் அவளுக்கு கட்டுப்படுவது அவளை மிகவே பாதித்துக் கொண்டிருந்தது.

அதன்பின் திதிக்குண்டான காரியங்கள் வேகமாக நடந்து முடிந்தன. இறுதியாக மூன்று சோற்று உருண்டைகளை அவர்கள் மூன்று பேரிடமே தந்த ராமகிருஷ்ணய்யர்,

"இதைக் கொண்டுபோய் மொட்ட மாடில காக்காய்க்கு வையுங்கோ. உடனே காக்கா வந்து சாப்ட்டா அவங்களே வந்துட்டதா அர்த்தம். நீங்க வைக்கற சாதத்தை சாப்ட்டுட்டா அவங்க ஆத்மா திருப்தியடைஞ்சதா பொருள்-"

- என்றார். அவர் சொன்னதைக் கேட்ட எடில்கார்ட் மிக ஆவலாக தாராவை தூக்கிக் கொண்டு ஸ்ரீராமுடன் மொட்டை மாடிக்குச் சென்றாள்.

பங்களாவைச் சுற்றிலும் தென்னை மரங்கள். கைப்பிடிச்சுவர் மேல் முதலில் ஸ்ரீராம் சோற்று உருண்டையை வைத்தான். பின் எடில்கார்ட், அடுத்து தாரா... பின்னாலேயே

வந்த ராமகிருஷ்ணய்யர் "காகாகான்னு கூட்டுங்கோ" என்று எடுத்துக் கொடுத்தார்.

ஸ்ரீராம் உடனே 'காகாகா' என்றான். ஆனால் குரலில் சுரத்தில்லை.

"நல்லா கத்தணும். உங்க குரல் பித்ருலோகம் வரை கேட்கணும்" - என்றார் ராமகிருஷ்ணய்யர். அது எடில்கார்டை தூண்டிவிட்டது. அவள் கத்தத் தொடங்கினாள்.



'கா...கா...கா...கா...'

நடுவில் தாராவைத் தூண்டி அவளையும் கத்தவிட்டாள். கா...கா... கா...கா.'


-அவர்கள் கத்தியது வீண் போகவில்லை. ஒரு காகம் பறந்து வந்தது. எடில் கார்ட் வைத்த உருண்டை அப்படியே இருக்க மற்ற இரண்டு உருண்டைகளையும் சாப்பிட்டு முடித்தது.

எடில்கார்ட் வைத்த உருண்டை அப்படியே இருக்க திரும்பிப் பறந்தும் போயிற்று. எடில் கார்ட் முகத்தில் மெல்லிய அதிர்வு.

ராமகிருஷ்ணய்யரைத் தொடர்ந்து பின்னால் வந்து நின்றிருந்த அருணாசலம் அதை கவனித்தவராக "என் அக்காவுக்கு ஒரு வெள்ளைக்காரி மருமகளா வந்துட்டாளேன்னு அப்பவே ரொம்பவே வருத்தம். அதான் அவ கைபட்டதை சாப்பிட விரும்பல போல..." என்றார் ராமகிருஷ்ணய்யரிடம்.

எடில்கார்டும் அதைக் கேட்டு கண்ணீர் விடத் தொடங்கியிருந் தாள். ஆனால் அந்த காகமோ ஒரு தென்னங்கிடுகின் மேல் சென்று அமர்ந்த நிலையில் அருணாசலத்தைத்தான் பார்த்துக் கொண்டிருந்தது! அவருக்குள்ளோ கொலைவெறி...

**(தொடரும்)**



**அழுத கண்களும் அதைத் துடைத்து விட்டுக் கொண்ட முகமுமாய் மாடியில் இருந்து இறங்கி வந்த மிடில் கார்டை, ஈஸி சேரில் மல்லாந்திருந்த வைத்யநாதன் கவனித்தார். அருகில் அழைத்தார். அவளும் சென்று நின்றாள். உற்றுப் பார்த்து 'அழுதாயா?' என்று பார்வையாலேயே கேட்டார்.**

பதில் பின்னாலேயே வந்த அருணாசலத்திடம் இருந்து வரத் தொடங்கியது.

"அது ஒண்ணுமில்ல அத்தான்... எடில் காக்கைக்கு வெச்ச சோத்தை காக்கை வந்து சாப்பிடலை. ஆனா ஸ்ரீராம் வைக்கவும் வந்து சாப்பிட்டுச்சு. அதான்...." என்றவர் இடைவெளியின்றி, "சாகும்போதுதான் இவ மேல வெறுப்போட செத்தான்னா செத்த பிறகும் கல்யாணிக்கு வெறுப்பு விலகல போல..." என்றார். அந்த பதில் எடில் கார்ட் வரையில் ஊசியால் குத்தியது போல் இருந்தது.

ஆனால் ஸ்ரீராம் அதை அலட்சியமாக மறுத்தான். 'எடில்... வாட் நான்சென்ஸ் தீஸ் ஃபார் ஆல்? ஆர் யூ எ எஜிகேடட் கேர்ள்?" என்று அவளைப் பார்த்து கோவித்தவன்,

"அங்க்கிள்... இது ஒரு சப்பை மேட்டர். யார் சோறு வெச்சாலும் காக்கா வரும். காக்கா அலையறதே அதுக்குத் தானே? நான் வைக்கவும் வந்து சாப்பிட்டது. வயிறும் நிரம்பிடிச்சு. அதனால எடில் சோறு வைக்கவும் அதுக்கு சாப்பிடத் தோணலை. தட்ஸ் ஆல்! அப்புறம் இந்த காக்காயை எங்கம்மாவா கற்பனை பண்ணி உளறினதெல்லாம் போதும்.

இறந்தவங்கல்லாம் காக்காவா திரும்பி வருவாங்கன்னா ஒவ்வொரு காக்காயும் ஒரு இறந்து போன மனுஷன்னு ஆயிடுது. அப்புறம் அந்த காக்கா இறந்தா எதுவா வரும்னு ஒரு கேள்வியும் கேட்க வேண்டியிருக்கு. இப்படி நான் கேட்டா உடனே நாத்திகம் பேசறான். நம்பிக்கை

4

**இந்திரா சௌந்தர்ராஜன்**



# கா.. கா.. கா..

இல்லாதவன்கற வருத்தம் வேற.

அங்க இருந்தவரை இந்த மாதிரி எல்லாம் நான் வருத்தப்பட்டதேயில்லை."

- ஸ்ரீராம் பொரிந்து தள்ளினான். அடுத்த நொடி படபடவென்று கைதட்டல் - தட்டியவள் கனிகா!

"ஃபென்டாஸ்டிக் அத்தான். பிரில்லியன்ட்" என்றாள். அவன் எண்ணத்தோடு ஒத்துப் போகிறாளாம்! அவனுக்கும் அவள் கை

தட்டவும் மகிழ்வாக இருந்தது.

"கனி... உனக்கு இந்த மாதிரி பிலீவ் எல்லாம் இல்லையா?" - என்றான்.

"நிச்சயமா இல்லை. பைதபை அப்ப நாளைக்கு குலதெய்வம் கோயிலுக்குப் போய் மொட்டை போடணுமே - அதை எல்லாம் கேன்சல் பண்ணிடலாமா?" என்று கேட்டாள்.

"நான் ஆரம்பத்துல இருந்தே இந்த மொட்டை, வழக்கைக்கு உடன்பாடில்லாதவன். ஆனா எடில்கார்ட் பிடிவாதமாக இருக்காளே...?"

"ஸ்ரீராம்... உன் நம்பிக்கைகள் உன்னோட! அதுக்காக வழிவழியா வர்ற பழக்கத்தை கை விடாதே. எனக்குத் தெரிஞ்சு உன் அம்மா உன் பொண்ணுக்கு மொட்டையடிக்கணும்னு எவ்வளவு ஆசைப்பட்டா தெரியுமா? அதுலயும் உங்க குலதெய்வமான மயான பரமேஸ்வரி ரொம்ப துஷ்டியான தெய்வம்..." - என்று இடையிட்டாள் மனோகரி மாமி.

"தெய்வம்கறீங்க... கூடவே துஷ்டின்னும் சொல்றீங்க. கடவுள் எங்கயாவது துஷ்டத்தனம் பண்ணுமா?" - பளிச்சென்று மடக்கினான் ஸ்ரீராம்.

மாமியிடம் திணறல். வைத்யநாதன் இந்த வாதப் பிரதி வாதங்களை பரிதாபமாக பார்த்தபடி இருக்க, அருணாசலம்தான் ஒருவழியாக அதற்கு பதில் சொல்ல முன் வந்தார்.

"ஸ்ரீராம்.... கடவுள் எவ்வளவு அன்பானவரோ அதே அளவு கண்டிப்பானவரும் கூட. நம்ம சாமிங்க கைல எல்லாம் எதுக்கு ஆயுதம்? தப்புப் பண்ணா தண்டிச்சுடுவேன்கறத உணர்த்தத்தான். ஒரு மிலிட்டரி மேன் கைல இருக்கற துப்பாக்கிய நாம எவ்வளவு பிரைடா பார்க்கிறோம். அப்படி பார்க்கணும் இந்த விஷயத்த. பைதபை மாமி சொன்னது ரொம்ப முக்கியமான விஷயம்.

விருப்பம் இல்லாம அரைமனசா முடிகொடுத்தாலோ இல்லை நம்பிக்கை இல்லாம நடந்துகிட்டாலோ ரொம்ப ஆபத்து."

"ஆபத்துன்னா... எந்த வகைல?"

"சொன்னா நீ நம்பமாட்டே...."

"இப்ப நீங்க சொன்னத எல்லாம் மட்டும் நம்பிட்டேனா?"

"சொல்றதக் கேள். இப்படி எல்லாம் பேசாதே..."

"நான் எங்க பேசறேன். நீங்கதான் பேசவைக்கறீங்க. என் ஒரு கேள்விக்குக்

---

**"என்னடி, திடீர்னு கடலை வியாபாரியை காதலிக்கிறே?"**

**"கடலை வியாபாரிகிட்டத்தான் இப்பெல்லாம் அதிகமா பணம் புழங்குது!"**

- குட்டி மு.வெங்கடேசன்

கூட யாரும் உருப்படியா ஒரு பதிலைச் சொல்லலை. ஆனால் மிரட்டலுக்கு மட்டும் பஞ்சமில்லை. அந்த மயான பரமேஸ்வரி என்ன பண்ணுவா அதைச் சொல்லுங்க."

"பாம்பு வடிவத்தில வந்து உயிரையே வாங்கிடுவா?"

''அப்படியா... ஈஸ் இட் ட்ரூ?"

''வேண்டாம் இந்தப் பேச்சை இதோட விடு. உங்கம்மாவோட விருப்பப்படி நாளைக்கு உன் மகளுக்கு நாம அந்த கோயிலுக்குப் போய் முடி எடுத்துட்டு நல்லபடியா திரும்பி வரோம். ஒரே ஒரு வேண்டுகோள், நம்பிக்கை



இல்லாத நீ தயவு செய்து வராதே!"

"நோ அங்க்கிள். ஐ மஸ்ட் கம் தேர். கொஞ்சம் கூட நம்பிக்கை இல்லாத இதே மனசோட நான் வரத்தான் போறேன். அந்த பாம்பு எப்படி வருதுன்னு பாக்கறேன். என்ன பீலா விட்றீங்களா? ஏன் அந்த ஈஸ்வரி சாரி மயான பரமேஸ்வரி டைரக்டா வர மாட்டாளா? அது என்ன பாம்வு வடிவத்துல...?

நீங்கல்லாம் திருந்தவே மாட்டீங்களா? நான் விவேகானந்தர் புக்ஸை கொஞ்சம் படிச்சிருக்கேன். அவர் முழுக்க முழுக்க சைக்காலஜி. இப்படி டப்பாத்தனமான பயமுறுத்தல் எல்லாம் கிடையவே கிடையாது."

- ஸ்ரீராம் சீறினான். வைத்யநாதன் பேச முடியாமல் கட்டிலில் நெளிந்தார். அது வரை கண்ணைக் கசக்கியபடி இருந்த எடில்கார்ட் பொறுமை இழந்தாள்.

''அங்க்கிள்.... ப்ளீஸ் ஸ்டாப் த டிஸ்கஷன்! மொட்டை ஏன் அடிச்சுக்கணும்னு எனக்குத் தெரியும். சன்யாசின்னா அவருக்கு சில வழிமுறைகள் இருக்கறமாதிரி லௌகீகமா வாழறவங்களுக்கான ஒரு வழிமுறை இது. மயான பரமேஸ்வரி ஒரு காவல் தெய்வம். அதுக்கு கோபம் வரும்னு எனக்கும் தெரியும். அங்க்கிள் எனக்கு சொல்லியிருக்கார். அந்த கோபத்துக்கு நாம பயப்பட்றதால நமக்கு நல்லது தான். பயப்படலேன்னா எதுவும் ஆயிடாது. ஆனா நஷ்டம் நமக்கு தான். அதைவிட தனியா ஒரு நஷ்டம் தேவையே இல்லை. இந்தப் பேச்ச இதோட விடுங்க.

நான் அந்த தெய்வத்த நம்பறேன். நிச்சயமா எங்களுக்கு எதுவும் ஆகாது."

– ஆணித்தரமாய் கூறி முடித்தாள்! அதன்பின் யாரிடமும் பேச்சில்லை.

அருணாசலத்தின் கார் கோப்பி வீட்டுமுன் நின்றது. கனிகாவும் வந்திருந்தாள். இருவருமாய் உள்ளே சென்று நம்பூதிரி முன் நின்றனர்.

நம்பூதிரியிடம் ஏறிடல்!

''எந்தா திவசம் கழிஞ்ஞோ?''

''கழிஞ்சது.. நாளைக்கு திட்டமிட்ட மாதிரி குலதெய்வக் கோயில்ல மொட்டை இடைல அந்த ஸ்ரீராம் என்னை கேள்வியால குடைஞ்சு எடுத்துட்டான் நம்பூதிரி....''

''அருணாசலம்... நூறு கேள்வி கேட்கலாம். அது சுலபம். ஆனா நம்பறதும், பின்னே பதில் சொல்றதும் தான் வல்லிய கஷ்டம்.''

''சரியா சொன்னீங்க நம்பூதிரி... நான்தான் அவன் கேள்வியா கேட்பான்னு தெரிஞ்சு தூண்டியும் விட்டேன். ஏன்னா அவனுக்கு கடவுள் நம்பிக்கை இல்லை. இல்லாமதான் அவன் வர்றான்னு எல்லார்க்கும் தெரியணும்கறதுக்காக... அதுக்குத்தோதா உங்க சர்ப்பம் அந்த வெள்ளக்காரிய கடிச்சா என் கணக்கும் சரியாயிடும். ஆனா அந்த வெள்ளக்காரிக்கு அம்பாள் மேல எவ்வளவு நம்பிக்கை தெரியுமா?''

– அருணாசலம் கேட்கவும் நம்பூதிரியிடம் சற்று கவனம்.

“என்ன நம்பூதிரி முகம் ஒருமாதிரி போகுது?”

“ஆ வெள்ளக்காரிக்கு அம்பாள் பக்தியோ?”

“ஆமாம் நம்பூதிரி.. பக்தின்னா ஏதோ அப்படி இப்படி இல்லை. அவளுக்கு நம்ம சம்பிரதாயங்கள் நல்லா தெரிஞ்சிருக்கு.” – அருணாசலம் கூறவும் நம்பூதிரிக்குள் ஒரு இனம் புரியாத உறுத்தல்.

பின் கண்களை மூடிக் கொண்டு தன் உபாசன தேவதையை உள்ளுக்குள் அழைத்தார். அது வந்து என்ன சொல்லிற்றோ தெரியாது. அவரிடம் மருட்சி.

“என்ன நம்பூதிரி...?”

“ஒரு மரணம் சத்யம்... ஒரு பிரேதம் சத்யம்..”

“எனக்கு ரெண்டு பேரும் போய்ச் சேரணும்..”

“ஒண்ணு மாத்ரம் சத்யம். ஒண்ணு பேதலிக்கும்.”

“அப்படின்னா?”

“பிராந்தும் தரிக்கும்...”

''பைத்யம்னு சொல்றீங்க அப்படிதானே?''

“அதே...”

“அது போதும்... அது போதும்...

## கனிகா பயத்தோடு பார்த்தபடி வந்தாள்

இதுல எதுவும் மாறாதே..."

"மாறாது."

"அப்ப உங்க தட்சணையை நான் இதை எல்லாம் பார்த்துட்டு தரேனே..?" - அருணாசலம் பதிலில் இழுக்க நம்பூதிரியிடம் ஒரு விரக்திச் சிரிப்பு. அதனுள் ஆயிரம் அர்த்தங்கள்! அருணாசலமும் கனிகாவுடன் புறப்பட நம்பூதிரி தான் அணிந்திருந்த பூணூலை கழற்றத் தொடங்கினார்.

"தேவி க்ஷமிச்சு..." என்றன உதடுகள்!"



மயான பரமேஸ்வரி கோயில்!

ஊருக்கு வெளியே அடர்வான காட்டுக்குள் வெகு அடக்கமாக இருந்தது. பழமையான சிறிய கோயில். கோபுரச் சருக்கங்களில் பறவை எச்சத்தால் முளைத்திருந்தன அரசஞ் செடிகள்! கோயிலுக்கான மண்பாதையிலும் மனித நடமாட்டமில்லாததால் அதில் பிரவேசித்திருந்த ஸ்ரீராமின் காரும் பின் தொடர்ந்து வந்த அருணாசலம் காரும் புழுதியை தாராளமாகவே புரட்டிப் போட்டன. அருணாசலத்தின் அருகில் ஒரு அட்டைப் பெட்டி. அதில் ஏராளமான பூஜைப் பொருட்கள் - கூடவே சில மண் பானைகள். அதில்தான் மொட்டை போட்ட பிறகு பொங்கலிட வேண்டும். அதில் ஒரு பானை மஞ்சள் துணியால் கட்டப்பட்ட நிலையில்!

கனிகா அதை அவ்வப் போது பயத்தோடு பார்த்தபடி வந்தாள். அதில்தான் அந்த பன்னிரண்டு அடி நீள சர்ப்பம் சுருண்டிருந்தது. எடில்கார்டின் உள்ளாடையும் போடப்பட்டிருந்தது.

கோயிலை ஒட்டி ஒரு குளம் உண்டு. அதில் இறங்கி குளிக்க வேண்டும். காத்திருக்கும் நாவிதர் தலைமுடியை எடுத்து முடிப்பார் - திரும்பவும் குளிக்க வேண்டும். அவருக்கு பானை நிறைய நெல் - கூடவே வேட்டி துண்டு. அது போக ஒரு காலணி. பின் நூற்றி எட்டு ரூபாய் காணிக்கை.

இதுதான் அந்த கோயில் ஐதீகம்.

அந்த நாளில் நூற்றி எட்டு... இன்று அதை ஆயிரத்தெட்டு ஆக்கிவிட்டார் நாவிதர். காட்டுக்குள் மெனக்கெட்டு வருவதற்கான கூலி.

அவருக்குத் தருவதை இழப்பாகவோ அதில் கணக்கோ பார்க்கக் கூடாது. அவரும்

மயானபரமேஸ்வரியை நம்பியே வாழ்ந்து வருபவர்.

பின், மொட்டைத் தலையுடன் சன்னதிக்குள் சென்று பக்தியோடு அபிஷேகம் செய்து அலங்காரம் செய்து கற்பூர ஆரத்திகாட்டி வணங்க வேண்டும். வெளியே வந்து பின் பொங்கல் பானையை பயபக்தியோடு தலையில் வைத்துக் கொண்டு கோயிலை வலம் வந்து விட்டு கோயிலின் கன்னி மூலையில் அடுப்பை உருவாக்கி அதன் மேல் பானையை வைத்து குளத்து நீரை ஊற்றி பொங்கலிட வேண்டும்.

அப்படி ஒரு பானைக்குள்தான் இருந்தது அந்த நாகம்!

சுத்தமில்லாமல் பூஜித்தால் கோயிலைச் சுற்றி வரும் போது பானையைச் சுமந்து வர முடியாது. கீழே விழுந்து உடையும். பாம்பும் சீறி எழுந்து தாக்கி விடும்.

எடில் கார்டு சுற்றி வரும் போது எப்படி யாவது காலை இடரச் செய்தால் போதும் என்பதுதான் இப்போது அருணாசலம் கணக்கு. பானைக்குள் பாம்பு வந்தது பரமேஸ் வரியின் கோபத்தால் என்று அப்புறமாய் பேசினால் யாரும் மறுக்கப் போவதில்லை என்பதும் அருணாசலத்தின் கணக்கு!

காரும் கோவிலை ஒட்டி நின்றது.

எல்லோரும் இறங்கிக் கொண்டனர். ஸ்ரீராம் அதிநவீன வீடியோ கேமராவும் கையுமாக இறங்கினான். அந்த கார் அவனுக்கு மிகப் பிடித்து விட்டது. இறங்கிய ஜோரில் கோயிலைப் பார்த்தான். கோயிலின் தூர்ந்த கோபுரம் மேல் ஒரு காக்கை மட்டும் அமர்ந்திருக்க அதை ஜூம் செய்து படம்பிடிக்க ஆரம்பித்தான்.

எடில்கார்ட் மளமளவென்று பக்தி

அடுத்த
4 வாரத் தொடர்
எழுதுபவர்
**பட்டுக்கோட்டை பிரபாகர்**

சிரத்தையோடு தன் செயல்களில் இறங்கினாள். 'குளம் குளியல், முடி எடுத்தல், நாவித தானம், கோவிலுக்கு அபிஷேகம்' என்று எல்லாமே விறுவிறுப்பாக நடந்தது.

பொங்கல் பானையை அவள் கேட்கும் போது எடுத்து வரத் தயாராக இருந்தவர் அதை கையில் எடுத்தார் அதை கவனித்த ஸ்ரீராம் "கனி அதை நீ தலைல வெச்சு போஸ் கொடு.. ஷுட் பண்ணிக்கறேன்' என்றான்.

ஒரு வினாடி ஆடிப் போனாள் கனிகா.

''கமான்.. உன்னப் பாத்து தான் எடில் கார்டும் அதை தலைல வெச்சு பிடிச்சிக்கணும். கமான் குயிக். குயிக்..' என்றிட அருணாசலம் ஜாடை காட்டியவராக அவள் தலைமேல் வைத்தார்.



முன்னதாக துணியை இறுக்கமாக கட்டினார். அது கனிகாவுக்கும் தைரியம் தந்தது.

அவள் தலையில் அந்தப் பானை ஏறி அமர்ந்திட அவள் நடக்க ஆரம்பித்தாள்.

“சபாஷ்.. அங்க்கிள் எங்க, உங்க மயானபரமேஸ்வரிய காணோம்? ஏதோ பாம்பு வடிவத்துல வருவா, அப்படி இப்படின்னீங்களே?...'' என்று ஷூட் செய்தபடியே கிண்டலாய் கேட்டான். அப்போது ஒரு அதிசயம் போல கோபுரத்தில் அமர்ந்திருந்த காக்கை பறந்து வந்து பானையில் தான் சாப்பிட ஏதோ இருப்பது போல் கருதி ஒரு தட்டு தட்டிவிட்டது. பானையும் உருண்டு கீழே விழ, அடைந்து கிடந்த அந்த பாம்பும் ஒரே சீற்றமாய் கனிகாவின் காலை வளைத்து ஒரே போடு!

அதைப் பார்த்த அருணாசலம் விடைத்துப் போனார். ஸ்ரீராமிடமும் விக்கிப்பு! மற்றவர்களிடமும்....!

ஒரு மாதம் கழிந்து விட்ட நிலையில்...

ஸ்ரீராம், எடில்கார்ட், தாரா மூவரும் அமெரிக்கா புறப்பட்டனர். தாராவிடம் நல்ல உற்சாகம். சுமாராக தலைமுடியும் வளர்ந்து விட்டிருந்தது. வைத்யநாதன் வாசல் வரை வந்து வழியனுப்ப காரில் ஏறப்போனவன் 'காகாகா' என்கிற குரல் கேட்டு மாடிச்சுவற்றை பார்த்தான். அதன் மேல் காக்கை ஒன்று!

சில வினாடிகள் உற்றுப் பார்த்தவன் சோகமான முகத்தோடு எல்லோரிடமும் விடை பெற்றுக் கொண்டான்.

பாவம் அருணாசலம்! கொஞ்சம் சிரிப்பு கொஞ்சம் கோணட்டல் என்று ஒரு மாதிரி முகத்தோடு விடைகொடுத்தார். காருக்குள் அமரவும் கார் வேகமெடுக்கத் தொடங்கியது.

“எடில் இன்னிக்கு காக்கைக்கு நீ சோறு வைக்கலியா?” அவளிடம் அவன் கேட்டான்.

“வெச்சேனே..”

“அம்மாவுக்கு இன்னும் பசி போல..”

அவனா சொன்னான்? அவள் சிலிர்ப்போடு பார்த்தாள். ''வாழ்க்கைல அறிவுக்கும் அப்பாற்பட்ட விஷயங்கள் இருக்கத்தான் செய்யுது. நம்பிக்கை வெச்சா மட்டும்தான் அதெல்லாம் புரியுமோ?'' - கேட்டான். அவளிடம் சிலிர்ப்பு குறையாத ஆமோதிப்பு! ●

(முற்றும்)